# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 18.07.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :**

பொதுவாக மாநாட்டிற்கு முந்தைய வாரத்தில் ஆண்டு மாநாட்டிற்கு வருகை தரும் விருந்தினர்களின் விருந்தோம்பல் தொடர்பாக விருந்தோம்பல் செய்பவர்களுக்கு கவனமூட்டுவதற்காக நான் குத்பாவில் குறிப்பிடுவது வழக்கமாக இருந்து வருகிறது. இந்த விருந்தோம்பல் ஜமாஅத் அமைப்பின்கீழ் நடைபெறுவதுடன் மட்டுமின்றி தனிப்பட்ட முறையிலும் அஹ்மதிகள் தங்களது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்தோம்பல் செய்கின்றார்கள்.

விருந்தோம்பல் எப்படிப்பட்ட பண்பாகவும் நல்லொழுக்கமாகவும் இருக்கின்ற –தென்றால் அதுபற்றி திருக்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளது. நபிமார்களிடத்திலும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களிடத்திலும் இந்த சிறப்பான பண்பு இருக்கும். ஒருவருக்கும் மற்றவருக்குமிடையில் அன்பையும் நேசத்தையும் வளர்ச்சியடையச் செய்வதறகு விருந்தோம்பல் ஒரு வழியாக இருக்கின்றது. நம்மைச் சாராத மற்றவர்களிடத்திலும் இந்த பண்பானது சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களை நமக்கு அருகில் கொண்டு வருகிறது. இதனால் மேலும் தப்லீகிற்கான வழிகள் திறக்கின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையிலும் நமக்கு விருந்தினர்களை கண்ணியப்படுத்தும் காட்சியைப் பார்க்க முடிகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் வாழ்க்கையிலும் இதன் பக்கம் ஒரு குறிப்பான கவனம் செலுத்தப்படுவதை நம்மால் பார்க்க முடிகின்றது. மக்கள் அதிகமாக வருவார்கள் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் இல்ஹாம் மூலம் அறிவித்துள்ளான். வெளியூர்களிலிருந்து மக்கள் அதிகமாக வரும்போது அவர்கள் விருந்தினர்களாகத்தான் வருகின்றார்கள். எனவே, **வல துஸாஹிர் லிஹல்கில்லாஹி வலா தஸ்அமு மினன்னாஸ்** – எந்த மக்கள் உம்மிடம் வருவார்களோ அவர்களிடம் நீங்கள் தீய ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டாம். அவர்கள் அதிகமாக வருவதைக் கண்டு சோர்ந்துவிடவும் வேண்டாம் என்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் வந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த விருந்தோம்பலை செய்ய வேண்டியது இருந்தது. ஏனென்றால், இது நபிமார்களுக்கே உரிய சிறப்புப் பண்பாகும். ஆனால், உண்மையில் இதில் நமக்கு போதனை வழங்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் லங்கர் (உணவகம்) விரிவடையத்தான் போகிறது. அது பரவத்தான் போகின்றது. எந்த இடத்தில் காலத்தின் கலீஃபா இருக்கின்றாரோ அந்த இடத்தில் குறிப்பாகவும் அதை தவிர ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பெயரில் மக்கள் ஒன்றுகூடும் இடங்களிலும் இந்த விருந்தோம்பலை நாம் செய்தாக வேண்டும். அந்த இடங்களில் விருந்தோம்பல் என்ற இந்த உயர்வான நல்லொழுக்கத்தை நிறைவேற்றுவதில் இந்த பணிக்காக கட்டளையிடப்பட்டுள்ள மக்கள் பின்தங்கிவிடக் கூடாது. ஜமாஅத்தின் எண்ணிக்கை மிக அதிகமாக பெருகி விடுவது பற்றிய முன்னறிவிப்புகளும் உள்ளன. எண்ணிக்கை பெருகுவதைப் பற்றி மட்டுமின்றி ஜமாஅத்திலுள்ள நபர்களின் மனத்தூய்மையும் நன்றியுணர்வும் வளர்ச்சியடைவது பற்றியும் முன்னறிவிப்பு இருக்கின்றது. அதாவது தூயவர்களின் கூட்டம் தலைமையகத்தைச் சுற்றி சுற்றி வரும் என்ற முன்னறிவிப்பு இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமல்லாமல் உண்மையைத் தேடி வருபவர்களுள் ஒரு பெரும் எண்ணிக்கையில் வந்து கொண்டே இருப்பார்கள் என்ற முன்னறிவிப்பு இருக்கின்றது. அப்போது அவர்களுக்கும் விருந்தோம்பல் நடைபெறும். இதற்காகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லங்கர் கானா (உணவகம்) வை ஆரம்பித்தார்கள். இதையும் முக்கிய பணிகளில் ஒரு பணியாக அவர்கள் குறிப்பிட்டுக் கூறியிருந்தார்கள். இன்று அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் லங்கர் உலகின் மூலைகளிலெல்லாம் செயல்பட்டு வருகிறது. இதனால் எங்கெல்லாம் ஜமாஅத்தின் தலைமையகங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியை கேட்பதற்காக

வருபவர்களின் கவனம் நம் பக்கம் திரும்பியுள்ளது. ஆண்டு மாநாடு நடக்கும்போது இதன் பொலிவான காட்சிகளை நம்மால் பார்க்க முடிகின்றது. இவ்வகையில் விருந்தோம்பல் செய்வது ஒவ்வொரு அஹ்மதிக்கும் தனிப்பட்ட முறையிலும் காலத்தின் கலீஃபாவிற்கும் அவருடன் இணைந்திருக்கும் ஜமாஅத் அமைப்பிற்கும் குறிப்பாகவும் கடமையாகி விட்டது. இதில் நமக்கு ஒரு எச்சரிக்கை இருக்கின்றது என்று நான் கருதுகின்றேன். இவ்வி-யத்தில் நீங்கள் உயர்வான நல்லொழுக்கத்தை காட்டவில்லையென்றால் நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளிலிருந்து புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் ஆகி விடலாம். இந்த நல்லொழுக்கத்தை நீங்கள் நிலைபெறச் செய்தால் இதன் மூலமாக அல்லாஹ்வின் திருப்தியையும் அவனது திருப்பொருத்தத்தையும் பெற்றுக் கொண்டவர்களாக நீங்கள் ஆகி விடுவீர்கள். எனவே, மாநாட்டுப் பணியில் இருப்பவர்களும் தன்னார்வத் தொண்டர்களும் ஜமாஅத் அமைப்பின்கீழ் செயலாற்றுபவர்களும் மிகவும் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். அவர்களுக்கு இந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

அல்லாஹ்வின் அருளால் மூத்த வயதிலுள்ள ஆண்களும், தாய்மார்களும், குமரிப்பெண்களும், இளைஞர்களும், சிறுவர்களும் ஒரு குறிப்பான உணர்வுடன் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காகவும் ஆண்டு மாநாட்டில் Duty கொடுப்பதற்காகவும் தங்களது பெயர்களை கொடுக்கின்றார்கள். இப்போது ஒவ்வொரு நாட்டிலும் மாநாடுகள் நடக்கின்றன. பல நாடுகளில் நானும் அம்மாநாடுகளில் கலந்து கொள்கின்றேன். இவ்வகையில் ஒவ்வொரு சமுதாயத்தைச் சேர்ந்த அஹ்மதியும் அல்லாஹ்வின் அருளால் Duty கொடுப்பதற்காக தங்களை அர்ப்பணிக்கின்றார்கள். மகிழ்ச்சியுடன் தங்களை அர்ப்பணிக்கின்றார்கள். ஆப்பிரிக்காவிலுள்ளவர்களை இதற்கு உதாரணமாக நான் கூறியிருந்தேன். அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளிலும் மற்ற நாடுகளிலும் ஒவ்வொரு துறையைச் சேர்ந்த மக்களும், எல்லா வயதிலும் உள்ள மக்களும் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். மிகவும் மகிழ்ச்சியுடன் தங்கள் Duty -ஐ அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். ஆனால் U.K -ன் ஆண்டு மாநாட்டிற்கு ஒரு முக்கியவத்துவம் இருந்து வருகிறது. கிலாஃபத் இங்கு இருப்பதால் விரிவான ஏற்பாடுகளைப் பொறுத்தவரை அல்லாஹ்வின் அருளால் மற்ற நாடுகளை விட இங்கு ஏற்பாடுகள் அதிகமாக செய்யப்படுகின்றது. மக்களது கவனமும் இந்த மாநாட்டின் மீது அதிகமாக இருக்கின்றது. நம்மவர்களும் மற்றவர்களும் இந்த மாநாட்டை கவனமாகப் பார்க்கின்றார்கள். இவ்வகையில் Duty கொடுப்பவர்களும் பல வி-யங்களிலும் இதனை உணர்ந்து அதற்கேற்ப செயல்படுகின்றார்கள். தலைமையக ஆண்டு மாநாடாக இது உணரப்பட்டு வருவதால் எனக்கு இந்த மாநாடு தொடர்பாக அதிகம் கவலை இருக்கின்றது. மக்களது எதிர்பார்ப்புகளும் அதிகமாக இருக்கின்றது. ஏனைய நாடுகளிலிருந்து விருந்தினர்களாக வரக்கூடியவர்களிடத்தில் ஒரு வி-யத்தை நான் கூற விரும்புவது இப்போது கிலாஃபத்தின் தலைமையகமாக இது இருப்பதால் இலண்டனில் பாதுகாப்பிற்கான Duty கொடுக்கின்ற குத்தாம்களும் மற்ற பணிகளில் இருப்பவர்களும் அல்லது நிரந்தரமாகவே இங்குள்ள லங்கரில் Duty கொடுப்பவர்களும் மற்ற நாடுகளைவிட அதிகமாக இருக்கின்றனர். இவர்களில் பலரும் நிரந்தரமாக இந்த பணிகளைச் செய்து வருபவர்களாகவும் இருக்கின்றார்கள். கடந்த 24 வருடங்களாக மிகவும் அழகிய முறையில் தங்கள் பொறுப்புகளை இவர்கள் நிறைவேற்றி வருகின்றார்கள். ரப்வாவிலும் காதியானிலும் இந்த பணிக்கென்றே நிரந்தரமாக ஒரு குழு இயங்கி வருகின்றது. ஆனால், இங்கு லங்கர் கானாவின் பல Duty களிலும், ஃபஸ்ல் பள்ளிவாசலில் உள்ள Duty களிலும் தன்னார்வத் தொண்டவர்களாக அன்ஸார்களும், குத்தாம்களும் அல்லாஹ்வின் அருளால் தங்கள் பணிகளைச் செய்கின்றார்கள். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் இந்த தொண்டிற்கான சிறந்த நற்கூலியை வழங்குவானாக. இந்த நாட்டில் பணவீக்கம் அதிகமாக உள்ள ஒரு நரகத்தில் வாழ்ந்து வரும் இவர்கள் தங்களது நேரத்தையும் பொருளையும் இதற்காக தியாகம் செய்கின்றார்கள். நிச்சயமாக இங்கு பணிபுரிகின்றவர்களுக்கு ஜமாஅத்துடனும், கிலாஃபத்துடனும் கலப்பற்ற மனத்தூய்மையுடன் கூடிய ஆழ்ந்த பற்று இருக்கின்றது. இதனால்தான் அவர்கள் இவ்வாறு பணியாற்றுகின்றார்கள். அல்லாஹ் எதிர்காலத்திலும் இவர்களுக்கு இதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக. ஜமாஅத்தின் ஆண்டு மாநாடும் லங்கரில் தொடர்ந்து இருந்து வரும் ஏற்பாடுகளும் மற்றவர்களுக்கு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்திலும் இந்த லங்கர் ஏற்பாட்டையும் மாநாட்டையும் கண்ட சில ஜமாஅத்தைச் சாரா மக்கள் இதனால் சிறந்த தாக்கத்திற்கு ஆளானார்கள். குறிப்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்களின் விருந்தோம்பலைப் பார்த்து இவர்கள் மிகவும் நல்ல தாக்கத்தைப் பெற்றுள்ளார்கள். இன்றைய நாட்களிலும் ஆண்டு மாநாடுகளின் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களினால் நிறுவப்பட்ட இந்த லங்கர் மக்களிடம் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இந்த முறை நான் ஆப்பிரிக்காவிலுள்ள பல நாடுகளுக்குச் சென்ற சமயத்தில் ஆண்டு மாநாடுகளில் மக்களது வருகையும் அதிகமாக இருந்தது. இந்த அத்தனை விருந்தாளிகளுக்கும் உணவு கிடைப்பதைப் பார்த்த மற்றவர்கள் இதனால் மிகவும் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளார்கள். மிகவும் வியப்புடன் இதுபற்றி கருத்து தெரிவித்துள்ளார்கள். இவர்களில் சிலர் இந்த வி-யத்தையே இது இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஜமாஅத் என்பதற்குரிய அடையாளமாக கருதுகின்றார்கள். இதுபோன்ற விருந்தோம்பலை நாங்கள் எங்குமே பார்க்க முடியவில்லை என்று அவர்கள் கூறினார்கள். இவை எல்லாமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கிய தர்பிய்யத்தின் காரணமாகவே ஏற்பட்டது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிக்கு ஏற்ப நம்மை வழிநடத்தி இந்த வழிகளை நமக்குக் காட்டித் தந்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அவர்கள் செய்து வந்த விருந்தோம்பலும் அவர்கள் வள்ளல்தன்மையுடனும் தாராள மனப்பான்மையுடனும் நடந்து கொண்டதன் விளைவாகவும் பல நிராகரிப்பாளர்களுக்கும் உண்மையைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது.

விருந்தோம்பல் எப்படிப்பட்ட சிறந்த நல்லொழுக்கமென்றால் அது மற்றவர்களை உலகரீதியாகவும், ஆன்மீகரீதியாகவும் உங்களுக்கு அருகில் கொண்டு வருவதற்கு காரணமாக அமைந்து விடும். மார்க்கத்தை புதுப்பிப்பதற்காகவும் அடியானுக்கு தன்னைப் படைத்த இறைவனை அடையாளம் காண வைப்பதற்காகவும் அல்லாஹ்வின் அருகில் கொண்டு வருவதற்காகவும், உயர்வான நல்லொழுக்கத்தை அவர்களிடம் நிலைபெறச் செய்வதற்காகவும் இந்தக் காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்றும் அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். வெளிப்படையாக பார்க்கும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் ஒப்படைத்திருந்த இந்த எல்லா பணிகளும் அவர்கள் மூலமாகவும் அவர்களது மறைவிற்குப் பிறகு கிலாஃபத் அமைப்பின் மூலமாகவும் நிறைவேறி வருவதாக உங்களுக்கு தெரிகின்றது. ஆனால், உள்ளங்களை திருப்புவதற்கான ஆற்றலானது அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. எனவே, உண்மையிலேயே இந்த பணிகளை அல்லாஹ் தானாகவே செய்கின்றான். கடந்த காலங்களிலும் செய்து வந்தான். இப்போதும் செய்து வருகின்றான். அல்லாஹ்வின் இந்த மகத்தான உதவியினால் அவன் கூறியதற்கு ஏற்ப உள்ளங்கள் நமது பக்கம் திருப்பப்படும்போது மக்கள் அதிகமாக வருவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு **யஃதூன மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக்** – மக்கள் வெகு தொலைவிலுள்ள இடங்களிலிருந்து உம்மிடம் வருவார்கள் என அறிவித்துள்ளான். அல்லாஹ் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்களையும் அதனை கற்பவர்களையும் அதனை ஆராய்ச்சி செய்பவர்களையும் அனுப்பும்போது அது தொடர்பாக நீர் அஞ்ச வேண்டாம். மாறாக, உயர்வான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு இவர்களுக்கு விருந்தோம்பல் செய்வதில் எந்த குறையையும் வைக்காதீர்கள் என்றும் கூறியுள்ளான்.

மார்க்கத்திலும் ஆன்மீகத்திலும் முன்னேற்றத்தைப் பெறுவதற்காக மக்கள் ஒன்றுகூட வேண்டும் என்பதற்காகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆண்டு மாநாடுகளை நடத்தினார்கள். எனவே, ஆண்டு மாநாட்டிற்காக வருகின்ற விருந்தாளிகளுக்கு எல்லா வகையிலும் தொண்டாற்றுவது இந்த நோக்கத்திற்காக தன்னை அர்ப்பணித்துள்ள ஒவ்வொருவரின் பணியாக இருக்கின்றது. முழு கவனத்துடன் Duty கொடுப்பது இவர்களின் கடமையாகும்.

இந்த விருந்தாளிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்காகவே வருகின்றார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக நீங்கள் இவர்களைப் பார்த்து அஞ்ச வேண்டாம். தீய ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டாம் என்று நமக்கும் அறிவுறுத்துகின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான அழகிய முன்மாதிரியில் இருந்தும் நமக்கு விருந்தோம்பலின் வியக்கத்தக்க உதாரணங்கள் கிடைத்திருக்கின்றது.

ஒரு விருந்தாளி தான் படுத்த படுக்கையை அசுத்தப்படுத்தி விட்டு சென்ற சமயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கைகளால் அதை கழுவினார்கள். நஜ்ஜாஸி அரசர் தரப்பிலிருந்தும் அனுப்பப்பட்ட

குழுவினர்க்கு தமது கைகளாலேயே அவர்கள் தொண்டு செய்துள்ளார்கள். சஹாபாக்கள் முன் வந்து எங்களை இந்த பணிகளைச் செய்ய விடுங்கள். எங்களுக்கும் இதற்கான சந்தர்ப்பத்தை தாருங்கள் என்று கேட்டார்கள். நீங்கள் ஏன் இவ்வளவு சிரமப்படுகின்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்குப் பதிலாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த மக்கள் முஸ்லிம்களுக்கு எந்த அளவு தொண்டு செய்துள்ளார்கள் என்றால் இப்போது எனது கைகளால் இவர்களுக்கு தொண்டு செய்வது எனது கடமையாக இருக்கின்றது என்று கூறினார்கள்.

ஒரு விருந்தாளி வந்தார். அவர் ஒரு ஆட்டின் பாலைக் குடித்தார். பிறகு மீண்டும் கேட்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் அவருக்கு வழங்கிக் கொண்டே இருந்தார்கள். இவ்வாறு இறுதியில் 7 ஆடுகளின் பாலையும் அவர் குடித்தார். ஆனால் இதைக் கண்ட அவர்கள் நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? இது உங்களது வயிறுதானா? அல்லது வேறு ஏதாவது பொருளா? என்று கேட்கவில்லை. மாறாக, கேட்ட அவருக்கு கொடுத்துக் கொண்டேயிருந்தார்கள்.

சஹாபாக்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எத்தகைய தர்பிய்யத் வழங்கியிருந்தார்கள் என்றால் விருந்தாளி உணவு உண்ண வேண்டும் என்பதற்காக வீட்டிலுள்ளவர்களையும் குழந்தைகளையும் அவர்கள் பசியுடன் தூங்க வைத்துள்ளார்கள். அந்த விருந்தளித்த நபித்தோழரும் வீட்டை இருளில் ஆழ்த்தி தானும் சாப்பிடுவது போல் தனது வாயிலிருந்து சத்தத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். இதன் மூலம் விருந்தினர் நானும் இவருடன் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதை உணர வேண்டும் என்பதற்காகவே அவர் அவ்வாறு செய்தார். பிறகு இத்தகைய விருந்தோம்பலும் இறைவனுக்கு எந்த அளவு விருப்பமானதாக ஆகிவிடுகின்றதென்றால் அரியணையிலிருந்து இறைவன் இதைக் கண்டு மகிழ்கின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இத்தகைய தொண்டர்களின் செயலைக் கண்டு அல்லாஹ் அல்லாஹ் மகிழ்ச்சியடைந்ததாக தனது தூதருக்கு நற்செய்தியும் வழங்கினான்.

முஹாஜிரீன்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்த போது அன்ஸார்கள் தங்களது விருந்தாளிகளை வரவேற்று தங்களது பாதி செல்வத்தின் பங்குதாரர்களாக அவர்களை ஆக்கினார்கள். இதை மகிழ்ச்சியுடன் கண்ட இறைவன் **யுஃஸிரூன அலா அன்புஸிஹிம்** அவர்கள் தங்கள் உயிரை விட இவர்களுக்கு (முஹாஜிரீன்களுக்கு) முன்னுரிமை வழங்குகின்றார்கள் என்று கூறியுள்ளான். அன்ஸார்கள் செல்வச் செழிப்பில் இருந்ததன் காரணமாக தங்களது சகோதரர்களுக்காக தியாகம் செய்தவாறு தங்கள் செல்வத்தை வழங்கவில்லை. மாறாக, அவர்களே ஏழ்மை நிலையில் இருந்தும்கூட தியாகங்கள் செய்தவாறு இதனை அவர்கள் செய்துள்ளார்கள். **ருஹாமாஹு பய்னஹூம்** (அவர்களுள் ஒருவருக்கொருவர் கருணையுடன் நடந்து கொள்வானாக) என்ற காட்சியை எல்லா சமயங்களிலும் அவர்களிடம் காண முடிந்தது. தங்களது சகோதரர்களுக்கு தொண்டு செய்வதில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஆண்டு மாநாட்டில் இங்கு வரும் விருந்தாளிகளும் கிலாஃபத் மீது கொண்டுள்ள அன்பின் காரணாகவும் மார்க்கத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இங்கு வருகின்றார்கள். எனவே, அவர்களுக்கு தொண்டு செய்வது நமது கடமையாகும். மென்மையுடனும், அன்புடனும் ஒவ்வொருவரிடமும் பரிமாறுவது நமது கடமையாகும். சிலர் முதல் முறையாக பாகிஸ்தானிலிருந்தும் ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளிலிருந்தும் வருகின்றார்கள். பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த மக்களும் வருகின்றார்கள். இவர்கள் அனைவரிடமும் உயர்ந்த நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வதும் இவர்களது தேவைகளை நிறைவேற்றுவதும் நமது கடமையாகும். பணக்காரராக இருந்தாலும் ஏழையாக இருந்தாலும் ஒவ்வொருவரையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினராகக் கருதி அவர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும். இந்த ஆண்டு கிலாஃபத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி அதிக எண்ணிக்கையில் விருந்தினர்கள் வருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். இவ்வகையில் முன்பைவிட அதிகமான விரிவான ஏற்பாடுகளை ஜமாஅத்தின் அமைப்பு செய்கின்றது. இவ்வகையில் பணியில் இருப்பவர்களும் இந்த ஏற்பாடுகள் வெற்றிகரமாக அமைய முன்பை விட அதிமகாக முயற்சிகளை செய்ய வேண்டும். ஏற்பாடுகள் எவ்வளவு சிறப்பாக செய்யப்பட்டிருந்தாலும் பணியில் இருப்பவர்கள் சரியாக தனது பணியைச் செய்யா விட்டால் எல்லா ஏற்பாடுகளும் வீணாகி விடும். எத்தகைய மகிழ்ச்சியுடனும் உணர்வுடனும் விருந்தினர்கள் வருகின்றார்களோ அத்தகைய உணர்வுடன் ஆண், பெண் பணியாளர்கள் இந்த விருந்தினர்களை வரவேற்க வேண்டும். அவர்களுக்கு தொண்டு செய்ய எல்லா சமயத்திலும் தயாராக இருக்க வேண்டும்.

முஹம்மதிய மஸீஹின் கிலாஃபத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைவதை யொட்டி முன்பை விட அதிகமாக பணியாளர்கள் தொண்டு செய்வதற்காக தங்களிடம் ஒரு உணர்வை உருவாக்குங்கள். தனது விருந்தினர்களுக்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காட்டிய அந்த முன்மாதிரியை நீங்களும் பின்பற்றி நடக்க வேண்டும். இதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாழ்விலிருந்தும் சில சம்பவங்களை உங்கள் முன்பு எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

விருந்தினர்களுக்கு விருந்தோம்பல் செய்வது தொடர்பாக போதனை செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

ஒவ்வொருவரது தேவையையும் கருத்தில் கொண்டு அதற்கேற்ப செயல்படும்படி லங்கர் கானா பொறுப்பாளருக்கு வலியுறுத்திக் கூறுங்கள். அந்த பொறுப்பாளர் தனி மனிதனாக இருந்து பல பணிகளையும் தன்னந்தனியாக இருக்கும் நிலையில் செய்ய வேண்டியது இருப்பதால் அவர் சில வி-யங்கள் தொடர்பாக கவனமில்லாமல் இருக்க சாத்தியமுள்ளது. எனவே, இன்னொரு நபர் அவற்றை நினைவூட்ட வேண்டும்.

இப்போது இறைவனது அருளால் போதுமான அளவில் மிக விரிவான அமைப்பு செயல்படுகிறது. தற்காலிக பணியாளர்களும், நிரந்தரமான பணியாளர்களும் இருக்கின்றார்கள். எனவே இந்த வகையில் எவ்வித குறைவும் இருக்கக் கூடாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவராவது அழுக்கான ஆடையை அணிந்திருந்தால் அதைப் பார்த்து விட்டு அவருக்கு விருந்தோம்பல் செய்வதிலிருந்தும் விலகிவிடக் கூடாது. ஏனெனில் விருந்தினர்கள் எல்லாருமே சமநிலையில் இருப்பவர்களாவார்கள். நமக்கு தெரிந்த புதிதாக வந்துள்ள நபராக இருந்தால் அவரது ஒவ்வொரு தேவையையும் நாம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். சில நேரங்களில் கழிவறை எங்கு இருக்கின்றது என்பது சிலருக்கு தெரியாமல் இருக்கலாம். இதனால் அவருக்கு கடுமையான துன்பம் ஏற்படும். எனவே, விருந்தினர்களின் தேவையை மிகவும் கருத்தில் கொள்வது அவசியமானது. நான் பெரும்பாலும் நோயாளியாகவே இருக்கின்றேன். (இது தமது வாழ்நாளின் இறுதி நாட்களில் அவர்கள் கூறிய அறிவுரையாகும் - ஹுஸுர்) எனவே, நான் எதுவும் செய்ய முடியாததற்கான தகுந்த காரணம் இருக்கின்றது. எந்த நபர்களை இப்படிப்பட்ட பணிகளுக்காக எனது இடத்தில் நான் நியமித்துள்ளேனோ அவர்கள் எவ்வித முறையீடும் செய்வதற்கான வாய்ப்பை வரவிடாமல் பார்த்துக் கொள்வது கடமையாகும். ஏனென்றால், மக்கள் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து பயணம் செய்தவாறு உண்மையுடனும் மனத்தூய்மையுடனும் உண்மையை ஆராய்ந்து பார்ப்பதற்காக இங்கு வருகின்றார்கள். பிறகு இங்கு அவர்களுக்கு சிரமங்கள் இருந்தால் அவர்களுக்கு துக்கம் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. துக்கம் ஏற்படும்போது அதனால் ஆட்சேபனைகளும் உருவாகும். இவ்வாறு இவை இவர்களது சோதனைக்கு காரணமாக அமைந்து விடும். அதன் பாவம் விருந்தோம்பல் செய்பவருக்கே கிடைக்கும்.

இந்த முறையும் பல்வேறு சமுதாயங்களை சேர்ந்த மக்கள் இங்கு வருகின்றார்கள். அதிக எண்ணிக்கையில் வருகின்றார்கள். இவர்களில் பலரும் முதன்முறையாக வருகின்றார்கள். அஹ்மதியல்லாத விருந்தினர்களும் ஆப்பிரிக்காவிலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் வருகின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் விருந்தோம்பல் செய்வதும் இவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதும் ஒவ்வொரு பணியாளர்களது கடமையாக இருக்கின்றது. இதுவரை நமது ஏற்பாடுகளால் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகளல்லாத மற்றவர்கள் சிறந்த தாக்கத்தைத்தான் பெற்றுள்ளார்கள். இந்த முறை எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்பதால் இதுபற்றி அதிகமான கவலை இருக்கின்றது. ஆனால், இந்த கணிசமான எண்ணிக்கையின் விளைவாக ஏற்பாடுகளில் எவ்வித வித்தியசமும் இருக்கக் கூடாது.

ஒருமுறை விருந்தினர்களுக்குரிய ஏற்பாடுகள் பற்றியும் விருந்தினர்களுக்கு செய்யப்பட்ட விருந்தோம்பல் தொடர்பாகவும் கூறப்பட்ட போது அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

எந்தவொரு விருந்தாளிக்கும் எவ்வித கஷ்டமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் எனக்கு எப்போதும் கவனம் இருக்கின்றது. எதுவரை நம்மால் முடியுமோ அந்த அளவு விருந்தினர்களுக்கு சுகத்தை வழங்க வேண்டும் என்பதை எப்போதும் நான் வலியுறுத்திக் கூறி வருகின்றேன்.

விருந்தினரின் உள்ளம் கண்ணாடியைப் போல மென்மையானதாக இருக்கின்றது. அதை சிறிதாக தட்டினாலும் அது உடைந்து விடும். இதற்கு முன்னர் விருந்தினர்களுடன் சேர்ந்து அமர்ந்து உண்பதை நான் எனது வழிமுறையாக வைத்திருந்தேன். ஆனால், எப்போதிருந்து எனது நோய் அதிகமானதன் காரணமாக எனக்கு பத்திய உணவு சாப்பிட வேண்டியது வந்ததோ அப்போதிருந்தே இந்த ஏற்பாடு இல்லாமல் ஆகி விட்டது. அத்துடன் விருந்தாளிகளின் வருகையும் எந்த அளவு அதிகமாகி விட்டதென்றால் அதற்கான போதிய இடம் இல்லாமல் ஆகி விட்டது. எனவே, வேறு வழியின்றி நான் தனியாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தங்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களை தெரிவிப்பதற்கு நமது தரப்பிலிருந்தும் ஒவ்வொருவருக்கும் அனுமதி உண்டு. சிலர் நோயாளியாக இருப்பார்கள். அவர்களுக்காக தனியாக வேறு உணவிற்கான ஏற்பாடு செய்யலாம்.

இவ்வகையில் பல்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கும் தனித்தனியாக உணவிற்கான ஏற்பாடுகளை நாம் செய்ய முடியாமல் இருந்தாலும் இங்கு மூன்று வகையன உணவுகள் தயார் செய்யப்படுகின்றது. ஆனால், உணவை வழங்குபவர்களும் ஒவ்வொருவரது இயல்புக்கு ஏற்ப அவர்களுக்கு எத்தகைய உணவு தேவை என்பதை தெரிந்து அவர்களுக்குரிய உணவை வழங்க வேண்டும்.

ஹஸ்ரத் மவ்லவி ஹஸன் அலி சாஹிப் (ரலி) பைஅத் செய்வதற்கு முன்புள்ள தனது ஒரு சம்பவத்தை இவ்வாறு கூறுகின்றார்கள்.

மிர்ஸா சாஹிபின் விருந்தோம்பலைக் கண்டு நான் மிகவும் வியப்படைந்தேன். அவர்களது விருந்தோம்பலைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு ஒரு சிறிய வி-யத்தை நான் எழுதுகின்றேன். எனக்கு வெற்றிலை சாப்பிடும் தீய பழக்கம் இருந்தது. அமிர்தசரஸில் எனக்கு வெற்றிலை கிடைத்தது. ஆனால், பட்டாலாவில் எங்களுக்கு எங்குமே வெற்றிலை கிடைக்கவில்லை. வேறு வழியில்லாமல் ஏலக்காய் போன்வற்றை சாப்பிட்டு பயணம் செய்து கொண்டிருந்தேன். அமிர்தசரஸில் உள்ள எனது நண்பர் ஒரு சமயத்தில் மிர்ஸா சாஹிபிடம் எனது இந்த தீய பழக்கம் பற்றி கூறி விட்டார். ஜனாப் மிர்ஸா சாஹிப் இதற்காகவே குர்தாஸ்பூரிற்கு ஒரு நபரை அனுப்பி வைத்தார். இரண்டாவது நாள் 11.00 மணிக்கு நான் சாப்பிட்ட பிறகு வெற்றிலை எனக்கு முன்பு இருந்ததைக் கண்டேன். 16 மைல்கள் தொலைவிலிருந்து எனக்காக வெற்றிலை வரவழைக்கப்பட்டது.

முதல் முறையாக காதியான் சென்ற சமயத்தில் அவர்கள் பைஅத் செய்யாமல் இருந்தாலும் 1896ல் மீண்டும் காதியான் சென்று அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் பைஅத் செய்தார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வீட்டின் ஒரு பகுதியாக இருந்த பைத்துல் ஃபிக்ரில் ஒரு முறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் படுத்திருந்தார்கள். நான் அவர்களது காலை அமுக்கி கொடுத்துக் கொண்டிருந்தேன். அறையின் ஜன்னல் கதவுகளை லாலா மலாவாமல் அல்லது லாலா சரம்பத் தட்டும் சத்தம் கேட்டது. நான் எழுந்து ஜன்னல் கதவுகளை திறக்க இருந்தேன் அதற்கு முன்னரே ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் விரைவாக எழுந்து ஜன்னலின் கதவுகளை திறந்து விட்டு தனது இடத்தில் வந்து அமர்ந்தார்கள். பிறகு நீங்கள் எங்கள் விருந்தாளிகள். விருந்தாளிகளை கண்ணியப்படுத்த வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் எனக் கூறினார்கள்.

இந்த சம்பவம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது எளிமைக்கு ஒரு உயர்ந்த நல்லுதாரணாக இருக்கின்றது. விருந்தினர்களை கண்ணியப்படுத்துவது தொடர்பான ஒரு உயர்ந்த நல்லுதாரணமாகவும் இது இருக்கின்றது. வெளிப்படையாகப் பார்க்கும்போது ஒரு சிறிய விஷயம்தான். எஜமானர் தனது அடிமைகளுக்கு மதிப்பளித்தார் என்றால் அதற்கு ஒரே காரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான முன்மாதிரியைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதற்காகவே ஆகும். இதை உண்மையான முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு வைத்துள்ள ஒருவரால்தான் செய்ய முடியும்.

ஒரு முறை கபூர்தலா மாகாணத்தைச் சார்ந்த பிசோவால் என்ற ஊரிலிருந் ஒருவர் தனக்கு நெருக்கமான நண்பர் ஒருவரின் சிகிச்சைக்காக காதியான் வந்திருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இதைப் பற்றிய தகவல் கிடைத்தது. அவர்கள் உடனடியாக அவருக்காக மிகச் சிறந்த முறையில் தங்குவதற்கான ஏற்பாட்டையும் உணவிற்கான ஏற்பாட்டையும் செய்தார்கள். மிகவும் அன்புடனும் நேசத்துடனும் அவரது நோயைப் பற்றி கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களிடம் அவருக்கு மருத்துவம் செய்யும்படி குறிப்பாக வலியுறுத்திக் கூறியதுடன் சீக்கியர்களின் காலத்தில் நமது பெரியோர்கள் ஒருமுறை பிசோவால் சென்றிருந்தபோது அங்குள்வர்கள் அவர்களுடன் மிக நல்ல முறையில் பரிமறினார்கள். எனவே, நாமும் இவர்களிடம் சிறந்த முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். நஜ்ஜாஸி அனுப்பிய குழுவிலிருந்தவர்கள் தொடர்பாக இந்த மக்கள் முஸ்லிம்களுக்கு தொண்டு செய்து நல்ல முறையில் பரிமாறினார்கள என்பதை எடுத்துக்கூறி அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கைகளாலேயே விருந்தோம்பல் செய்தது போல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் பிசோவாலிலிருந்து வந்தவர்களுடன் நடந்து கொண்டதை நாம் பார்க்கின்றோம்.

**ஹஸ்ரத் மீர் ஹாமித் அலி ஷா சாஹிப் சியால்கோட்டி தன்னைப் பற்றிய ஒரு சம்பவத்தை இவ்வாறு எழுதியுள்ளார்கள்:**

இந்த எளியவன் ஒரு முறை காதியானில் சிறிது காலம் தங்கிய பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் திரும்பிச் செல்வதற்கு அனுமதி கேட்டேன். ஹுஸுர் தங்களது வீட்டில் அமர்ந்திருந்தார்கள். அவர்களது அளப்பரிய கருணையானது அவர்களது ஊழியர்களை வீட்டிற்குள் செல்வதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்கியிருந்ததால் இந்த எளியவனும் உள்ளே செல்ல அனுமதி கேட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தூது அனுப்பியிருந்தேன். எனது தூது கிடைத்ததும் அவரை அங்கு இருக்கச் சொல்லுங்கள். நான் இப்போது வெளியில் வருகின்றேன் என்று கூறினார்கள். இதைக் கேட்டு கோல் கம்ரா (வட்ட அறை) விற்கு கிழக்கே உள்ள மைதானத்தில் நின்று கொண்டிருந்தேன். மற்ற சகோதரர்களும் மின்மினிப் பூச்சிகளைப் போல இறை ஒளியின் இந்த தீபத்தைக் காண அங்கே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளியில் வரப்போகின்றார்கள் என்பதை அறிந்து அங்கு வந்து விட்டார்கள். ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிபும் கூட அங்கு வந்து விட்டார்கள். ஜமாஅத் சகோதரர்கள் அந்த இடத்தில் ஒன்றாக நின்றுகொண்டிருந்தார்கள். நாங்கள் சிறிது நேரம் வழிமேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருந்தோம். சிறிது நேரம் கழித்து ஹுஸுர் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்) வந்தார்கள். அப்போது நான் கண்ட காட்சி என்ன? ஹுஸுர் அவர்களின் கையில் பால் நிரம்பிய ஒரு பாத்திரமும், டம்ளரும் இருந்தது. அப்போது சாஹிப் ஸாதா மிர்ஸா மஹ்மூது அஹ்மத் அவர்களுடன் இருந்தார்கள். அவர்களது கையிலிருந்த கைக்குட்டையில் கற்கண்டு இருந்தது. ஹுஸுர் அவர்கள் கோல் கம்ரா (வட்ட அறை) வின் கிழக்கிலுள்ள தெரு வழியாக வெளியில் வந்ததுமே ஷா சாஹிப் எங்கே? என்று கேட்டார்கள். அப்போது நான் உடடினயாக முன்னால் வந்து ஹுஸுர், நான் இங்கே இருக்கின்றேன் என்று கூறினேன். ஹுஸுர் நின்று கொண்டிருந்தார்கள். என்னை உட்காரும்படி அவர்கள் கூறினார்கள். நான் அப்போதே தரையில் அமர்ந்தேன். (எதையாவது குடிக்கும்போது உட்கார்ந்து குடிக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறார்கள் – ஹுஸுர்) பிறகு ஹுஸுர் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்) டம்ளரில் பாலை ஊற்றி அதில் கற்கண்டை கலந்தார்கள். ஹுஸுர் அவர்கள் எனது கைகளில் தாமே அந்த பாலைத் தந்தார்களா? அல்லது மியான் மஹ்மூத் அவர்கள் தங்களது கைகளால் எனக்குத் தந்தாரா? என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது கண்கள் இப்போதும் அந்த காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. அப்போது சில நண்பர்கள் இந்த பணியைச் செய்ய முன் வந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இல்லை. நானே இதைச் செய்வேன் என்று கூறினார்கள். அவர்களே பாத்திரத்திலிருந்து பாலை ஊற்றினார்கள். அவர்களே அதில் கற்கண்டைப் போட்டு கலக்கி அதை உறைய வைத்தார்கள்.

ஷா சாஹிப் ஒரு டம்ளர் பாலை குடித்து முடித்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரண்டாவது முறையாக டம்பளரில் பாலை நிரப்பி அவர்களுக்கு கொடுத்தார்கள். நான் அதையும் குடித்து விட்டேன். டம்ளர் பெரியதாக இருந்தது. எனது வயிறு நிரம்பி விட்டது. பிறகு மூன்றாவது முறையாக டம்ளரில்

பால் நிரப்பப்பட்டது. நான் மிகுந்த வெட்கத்துடன் ஹுஸுர், இப்போது எனது வயிறு நிரம்பி விட்டது என்று கூறினேன். அதைக் கேட்டு விட்டு இன்னும் ஒரு டம்ளர் குடியுங்கள் என்று கூறினார்கள். நான் மூன்றாவது டம்ளர் பாலையும் குடித்தேன். பிறகு ஹுஸுர் அவர்கள் தனது ஜேபில் இருந்து கொஞ்சம் பிஸ்கட்டுகளை எடுத்து இதை உங்கள் ஜேபில் போட்டுக் கொள்ளுங்கள். வழியில் பயணத்தில் பசியெடுத்தால் இதை சாப்பிடுங்கள் என்று கூறினார்கள். நான் அதை எனது ஜேபில் போட்டுக் கொண்டேன். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாருங்கள். நான் உங்களை வழி அனுப்பி விட்டு வருகிறேன் என்று ஹஸ்ரத் மீர் ஹாமித் அலி ஷா சாஹிபிடம் கூறினார்கள். ஹஸ்ரத் மீர் ஹாமித் அலி ஷா சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹுஸுர், இப்போது சவாரியில் அமர்ந்து நானே சென்று விடுவேன் என்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினேன். (அவர் குதிரை வண்டியில் செல்ல வேண்டியதிருந்தது – ஹுஸுர்)

ஹுஸுர் நீங்கள் சிரமப்பட வேண்டாம் என்று நான் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இல்லை, நாம் ஒன்றாக செல்வோம் என்று கூறி என்னுடன் செல்ல ஆரம்பித்தார்கள். எங்களுடன் ஒரு பெருங்கூட்டம் வந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழியில் எங்களுடன் பேசிக் கொண்டே வந்தார்கள். பல அறிவுப்பூர்வமான வி–யங்களை நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். நாங்கள் வெகு தூரம் வரை நடந்து சென்ற பிறகு மவ்லவி நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் எனக்கு அருகில் வந்து எனது காதில் முன்னால் சென்று ஹஸ்ரத் சாஹிபிடம் விடை கொடுத்து விட்டு நீங்கள் ஊருக்கு செல்வதற்கான அனுமதியைப் பெறுங்கள். நீங்கள் அனுமதி பெறவில்லையென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறே உங்களுடன் நடந்து கொண்டேயிருப்பார்கள் என்று கூறினார்கள்.

**தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் முன்னால் வந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அவர்களை விட்டு விட்டு ஊருக்குத் திரும்புவதற்கான அனுமதியைக் கேட்டேன். அப்போது மிகவும் அன்புடன் முகத்தில் புன்னகையுடன் நல்லது, நமக்கு முன்பாகவே நீங்கள் சவாரியில் ஏறுங்கள் என்று கூறினார்கள். பிறகு நான் குதிரை வண்டியில் ஏறி அமர்ந்தேன். ஹுஸுர் திரும்பிச் சென்றார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் முன்ஸி அப்துல் ஹக் சாஹிபுடன் உலாவுவதற்காக சென்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

நீங்கள் எங்களது விருந்தாளியாக இருக்கின்றீர்கள். உங்களுக்கு என்ன தேவைப்பட்டாலும் எவ்வித செயற்கைத் தன்மையையும் வெளிப்படுத்தாமல் அந்த தேவையை எங்களிடம் கூறுங்கள். ஏனென்றால், நான் வீட்டிற்குள் இருப்பேன். யாருக்கு என்ன தேவை? என்பது பற்றி எனக்கு தெரியாது. இன்றைய நாட்களில் விருந்தினர்கள் அதிகமாக வருவதன் காரணமாக ஊழியர்களும் கவனமில்லாமல் இருக்கலாம். உங்களுக்கு நாவால் கூற விருப்பமில்லையென்றால் எனக்கு எழுதி அனுப்புங்கள். விருந்தோம்பல் எனது கடமையாகும்.

**முஃப்தி ஸாதிக் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

எனக்கு நினைவில் இருக்கின்றது. ஒருமுறை நான் லாஹுரிலிருந்து காதியான் வந்திருந்தேன். இது 1897 அல்லது 1898 -ல் நடந்த சம்பவமாகும். அப்போது மிகச் சிறிய இடமாக இருந்த மஸ்ஜித் முபாரக்கில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னை உட்காரும்படி கூறினார்கள். நீங்கள் இங்கு அமருங்கள். நான் உங்களுக்காக உணவு கொண்டு வருகின்றேன் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னிடம் கூறினார்கள். இதைக் கூறி விட்டு அவர்கள் வீட்டிற்குள் சென்று விட்டார்கள். ஏதாவது ஒரு ஊழியர் மூலமாக எனக்கு உணவு அனுப்பப்படும் என்று நான் கருதினேன். சில நொடிகளுக்கு பிறகு கதவு திறக்கப்பட்ட பிறகு நான் என்ன பார்த்தேன் என்றால் அவர்கள் தமது ஒரு கையில் உணவிற்கான தட்டையும், இன்னொரு கையில் சீனியையும் கொண்டு வந்தார்கள். என்னைப் பார்த்து நீங்கள் சாப்பிடுங்கள். நான் உங்களுக்கு தண்ணீர் கொண்டு வருகின்றேன் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். என்னை கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ளம் உருகியதன் காரணமாக எனது கண்களில் கண்ணீர் வந்தது.

நாங்கள் பின்பற்ற வேண்டிய தலைவராக இருக்கும் நிலையில் அவர்கள் எங்களுக்கு இப்படி தொண்டு செய்கின்றார்கள். அவ்வாறிருக்கும்போது நமக்கிடையில் ஒருவருக்கொருவர் எந்த அளவு தொண்டு செய்ய வேண்டும்? என்று நான் கூறினேன்.

**முன்ஸி ஸஃபர் அஹ்மத் சாஹிப் கபூர்தலவி அறிவிக்கின்றார்கள்:**

ஒரு நாள் ஆண்டு மாநாட்டின் போது அதிகமாக மக்கள் ஒன்று கூடியிருந்தார்கள். என்னிடம் குளிரிலிருந்து பாதுகாப்பதற்கான (வெப்பத்தைத் தரக்கூடிய) ஆடைகள் இல்லாமல் இருந்தது. படுக்கை, போர்வை என எதுவுமே என்னிடம் இல்லை. பட்டாலாவில் வசித்து வரும் நபி பக்ஸ் என்பவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வீட்டிலிருந்து போர்வைகளைப் பெற்று விருந்தினர்களுக்கு கொடுத்துக் கொண்டே இருந்தார். இஷா தொழுகைக்குப் பிறகு நான் ஹுஸூர் அவர்களிடம் சென்றேன. அப்போது தமது கக்கத்தில் கைகளை வைத்தவாறு அமர்ந்திருந்தார்கள் அவர்களது ஒரு மகன் (இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹாக இருக்கலாம் – ஹுஸூர்) அவர்களுக்கு பக்கத்தில் படுத்திருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மேலங்கி அவர்கள் மீது போர்த்தப்பட்டிருந்தது. நான் அதைப் பற்றி விசாரித்துக் கேட்டறிந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது படுக்கையையும் போர்வையையும் கூட விருந்தினர்கள் கேட்டதன் பேரில் அவர்களுக்கு வழங்கி விட்டது தெரிய வந்தது. ஹுஸூரிடம் எந்தப் போர்வையும், குளிர் தாங்கும் ஆடையும் இல்லாமல் அதிகமாக குளிர் இருக்கும் இந்த சமயத்தில் எப்படி இருக்க முடியும்? என்று கேட்டேன். அதற்கு விருந்தினர்களுக்கு கஷ்டம் ஏற்படக் கூடாது. நமக்கு என்ன நேரப் போகிறது? இந்த நிலையிலேயே இரவு கழிந்து விடும் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். நான் கீழே இறங்கி வந்து நபி பக்ஸ் சாஹிபை திட்ட ஆரம்பித்தேன். நீங்கள் ஹஸ்ரத் சாஹிபின் போர்வையைக்கூட கொண்டு வந்து விட்டீர்களே? என்று அவரிடம் கேட்டேன். மிகவும் வெட்கப்பட்ட அவர் எந்த நபரிடம் இவற்றை கொடுத்தேனோ அவரிடமிருந்து மீண்டும் அதை எப்படிப் பெற முடியும்? என்று கேட்டார். பிறகு முஃப்தி ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் அவர்களிடமிருந்து நான் படுக்கையையும் போர்வையையும் வாங்கி வந்தேன். அதனை நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கொடுக்க சென்றேன். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவற்றை வேறு ஏதாவது விருந்தாளிக்கு கொடுத்து விடுங்கள். எனக்கு பெரும்பாலும் தூக்கமே வராது என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நான் முதன்முதலாக 1897 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் காதியான் வந்தேன். ரமலான் மாதம் அப்போது ஆரம்பமாகியிருந்தது. லங்கர் கானா அப்போது இரண்டு பெரிய அறைகளையும் ஒரு வராண்டாவையும் கொண்டதாக இருந்தது. மற்ற இடங்கள் வெறும் தரையாகவே இருந்தன. ஹஸ்ரத் ஹாமித் அலி (ரலி) அவர்களுக்கு ஒரு விருந்தாளி வந்திருப்பதாக தகவல் கூறப்பட்டது. அப்போது விருந்தினர் தங்குமிடத்தின் பொறுப்பாளராகவும், காவலாளியாகவும், அலுவலராகவும் ஹாமித் அலி சாஹிப் ஒருவரே செயல்பட்டு வந்தார். அவருக்கு என்னைப் பற்றி தெரியும். மிகுந்த அன்புடனும் நேசத்துடனும் அவர் என்னை சந்தித்து கை குலுக்கினார். மிகவும் வியப்புடன் இந்த சமயத்தில் நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள் என்று கேட்டார். இரவு 3.00 மணிக்கு சஹர் செய்யப்படும் நேரத்தில் அவர் அங்கு வந்தார். அப்போது நான் வந்த விபரங்களை அவரிடம் கூறிய போது அவர் மிகவும் வியப்படைந்தார். அவரிடம் நான் கொண்டு வந்த சில காய்கறிகளை கொடுத்தேன். அதை வாங்கிக் கொண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டிற்குள் சென்றார். விருந்தாளி வந்திருக்கும் தகவலைக் கூறினார். அப்போது இரவு 3.00 மணிக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னை கோல் கம்ரா (வட்ட அறை) விற்கு வரும்படி அழைத்தார்கள். அங்கு நான் சென்று சேர்வதற்கு முன்பாகவே மிக விசேஷமாக உணவு எனக்கு வைக்கப்பட்டிருந்தது. நான் இந்த நொடிகளை எனது வாழ்நாளில் ஒருபோதும் மறக்க மாட்டேன். மிகவும் அன்புடனும், நேசத்துடனும் உங்களுக்கு மிகவும் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று என்னிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இல்லை, எனக்கு எந்த சிரமமும் ஏற்படவில்லை என்று நான் கூறினேன். அதற்கு அவர்கள் மீண்டும் மீண்டும் வரும் வழி மறந்து விட்டால் இதனால் மிகுந்த கவலை உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் என்று கூறினார்கள்.

வழி மறந்துபோனதால்தான் அவர் மிகவும் தாமதமாக அங்கு வந்து சேர்ந்திருக்கின்றார்.

**ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

என்னை சாப்பிடும்படி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் வலியுறுத்திக் கூறினார்கள். அவர்களுக்கு முன்னால் உணவை உண்பதற்கு நான் வெட்கப்பட்டேன். நான் இவ்வி-யத்தில் சிறிது தயங்கினேன். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது கைகளாலேயே உணவு கவளத்தை எடுத்து சாப்பிடுங்கள் என்று என்னிடம் கூறினார்கள். உங்களுக்கு பசியிருக்கும், பயணத்தால் களைப்பும் ஏற்பட்டிருக்கும் என்று என்னிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். நான் சாப்பிட ஆரம்பித்ததும் வெட்கப்படாமல் வயிறு நிரம்பும் வரை சாப்பிடுங்கள் என்று கூறினார்கள். அப்போது ஹாமித் அலி சாஹிபும் எனக்கு பக்கத்தில் அமர்ந்திருந்தார். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஹுஸூர் நீங்கள் தூங்குங்கள். நான் சாப்பிடுேன் என்று கூறினேன். அவர்கள் இருக்கும்போது நான் செயற்கையாக பாசாங்குடன் நடந்து கொள்ளக் கூடாது என்பதை உணர்ந்த ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் ஹாமித் அலி சாஹிப் நீங்கள் இவரை நன்றாக சாப்பிட வையுங்கள். பிறகு இங்கேயே இவர் படுப்பதற்கு படுக்கையை விரியுங்கள். இவர் சுகமாக நன்றாக உறங்கட்டும் என்று கூறி விட்டு உள்ளே சென்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சிறிது நேரம் கழிந்ததுமே ஒரு படுக்கையை எடுத்துக் கொண்டு மீண்டும் என்னிடம் வந்தார்கள். எனது நிலை மிகவும் வியப்புக்குரிய ஒன்றாக இருந்தது. அவர்களின் இந்த பரிமாற்றத்தைக் கண்டு ஒருபுறம் நான் வெட்கப்பட்டு கொண்டிருந்தேன். மறுபுறம் கண்ணியத்திற்குரிய எஜமானர் கீழ்நிலையிலுள்ள தனது அடிமைக்கு விருந்தோம்பல் செய்வதில் எந்த அளவு ஈடுபாடுடன் செயல்படுகின்றார் என்பதை நினைத்தவாறே ஹுஸூர் மன்னிக்க வேண்டும். நீங்கள் ஏன் சிரமப்படுகின்றீர்கள் என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இல்லை. எதற்காக நான் சிரமப்படப் போகின்றேன்? உங்களுக்குத்தான் இன்று மிகவும் சிரமம் ஏற்பட்டுள்ளது. நன்றாக ஓய்வெடுங்கள் என்று கூறிவிட்டு படுக்கையை என்னிடம் தந்து விட்டு அவர்கள் சென்று விட்டார்கள். ஹாமித் அலி சாஹிப் என்னுடன் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் மிகவும் அன்புடன் எனக்கு உணவு பரிமாறினார்கள்.

இதற்குப் பிறகு நடந்தது என்னவென்றால், நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். நான் உங்கள் கால்களை அமுக்கி விடுகின்றேன் என்று ஹஸ்ரத் ஹாமித் அலி சாஹிப் அவர்கள் என்னிடம் கூறினார்கள். நான் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று அவரிடம் கூறினேன். இதைக் கேட்ட அவர்கள் ஹஸ்ரத் சாஹிப் என்னிடம் அவரது கால்களை அமுக்கி விடுங்கள். அவர் மிகவும் களைப்புடன் இருக்கின்றார் என்று கூறியுள்ளார்கள். இதைக் கேட்ட நான் எனது உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில் எனது கண்களிலிருந்து கண்ணீர் வர ஆரம்பித்தது. எந்த அளவு அன்பு மற்றும் நேசத்தின் உணர்வு இந்த உயர்ந்த மனிதரின் உள்ளத்தில் இருக்கின்றது. தனது தொண்டர்களுக்காக அவரிடம் எத்தகு வேதனையுடன் கூடிய உணர்வு இருக்கின்றது.

ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எங்கள் மத்தியில் அமர்ந்திருந்தபோது மீண்டும் என்னிடம் நன்றாக தூக்கம் வந்ததா? என்று கேட்டார்கள். இப்போதும் களைப்பு இருக்கின்றதா? என்றும் கேட்டார்கள். இவ்வாறு தனது அன்பை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். இந்த அவர்களது அன்பும் பரிவும்தான் இறுதியில் நான் எனது வேலையை விட்டு விட்டு காதியானில் என்னைக் கொண்டு வருவதற்கு காரணமாக இருந்தது. ஹஸ்ரத் மியான் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் (ரலி) அவர்களின் ஒரு சம்பவத்தை கூறுகின்றேன். இவர் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு தூய தொண்டராக இருந்தவர். இவர் பங்கே என்ற ஊரிலுள்ள ஜமாஅத்தின் செயலாளராக இருந்தார். 1905 ஆம் ஆண்டு ஒரு நாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது தோட்டத்தில் அமர்ந்திருந்த சமயத்தில் மியான் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் காதியான் வந்தார். வழக்கம்போல் விருந்தினர் தங்குமிடத்தில் அவர் தங்கியிருந்தார். அப்போது மியான் நஜ்முத்தீன் மர்ஹூம் லங்கர் கானாவின் காவலாளியாகவும் அங்குள்ள ஏற்பாடுகளை கவனிப்பவராகவும் இருந்தார். அவருக்கு உடல்நலமில்லாமல் ஆனது. மனத்தூய்மையில் அவர் எவரையும் விட குறைந்தவரல்ல. ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதிலும் விருந்தாளிகளுக்கு சுகத்தைக் கொடுப்பதன் பக்கமும் அவருக்கு மிகுந்த கவனம் இருந்து வந்தது. நன்கு உழைக்கின்ற இயல்பு அவரிடம் இருந்தது. விருந்தாளியாக வந்த மியான் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் செயற்கையாக நடந்து கொண்டதன் விளைவாக அவருக்கு நன்கு சுடப்படாத ரொட்டிகள் கிடைத்தன. அதை சாப்பிட்ட அவர் நோயாளியாகி விட்டார்.

ஹஸ்ரத் யாகூப் அலி சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். எனக்கு இதுபற்றிய செய்தி கிடைத்ததும் நான் மியான் ரஹ்மத்துல்லாஹ் சாஹிபிடம் அவர் உடல்நலமில்லாமல் ஆனதற்கான காரணத்தைக் கேட்ட போது எனக்கு கிடைத்த ரொட்டிகள் நன்கு சுடப்படாத நிலையில் அவற்றை சாப்பிட்டதால் இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டது என்று கூறினார். நான் நேரடியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமே சென்று நீங்கள் எல்லா விருந்தினர்களையும் தனித்தனியாக ஒவ்வொரு ஜமாஅத் சகோதரர்களிடமும் பங்கிட்டு அவர்களை கவனிக்கும் பொறுப்பை தனி நபர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். அல்லது விருந்தாளிகளுக்கு எந்தத் தொல்லையும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன். நடந்த சம்பவத்தையும் கூறினேன். இன்று நான் அதை நினைத்துப் பார்க்கும்போது எனது உள்ளம் நடுங்குகிறது. இறைவனால் அனுப்பப்பட்ட தூதர் முன்னிலையில் இவ்வாறு கடுமையாக நான் ஏன் பேசினேன்? என்பதை நினைத்து நான் வருந்துகின்றேன். ஆனால், கருணையின் வடிவமாக திகழ்ந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது கடுமையான பேச்சின் பக்கம் செலுத்தவில்லை. நான் எப்படி பேசினேன் என்று கவலைப்படவில்லை. எனக்கு நீங்கள் தகவல் தெரிவித்தது மிகவும் நல்லது. நான் என்னுடைய வீட்டில் சம்பாத்தி சுடுவதற்கான ஏற்பாட்டை செய்து விடுவேன். மியான் நஜ்முத்தீன் இடம் இது பற்றி நான் வலியுறுத்திக் கூறுவேன். அவரை என்னிடம் கொண்டு வாருங்கள். எந்த விருந்தாளிக்கு துன்பம் ஏற்பட்டாலும் உடனடியாக எனக்கு தெரிவிப்பது மிக நல்ல வி-யமாகும். லங்கர் கானாவில் உள்ளவர்கள் இவற்றை எனக்கு தெரிவிப்பதில்லை. அவர்களும் விருந்தினர்கள் தொடர்பாக கேட்டு அறிவதில்லை என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிவிட்டு மியான் ரஹ்மத்துல்லாஹ் எங்கே என்று என்னிடம் கேட்டார்கள். அவர் அதிகம் நோய்வாய்ப்பட்டுள்ளாரா? அவரால் வரமுடிந்தால் அவரையும் இங்கு அழைத்து வாருங்கள் என்றும் கூறினார்கள். நான் திரும்பி வந்து ஹஸ்ரத் மியான் ரஹ்மத்துல்லாஹ் சாஹிபிடம் இதைப் பற்றி கூறினேன். நீங்கள் ஏன் ஹஸ்ரத் சாஹிபிற்கு தொல்லை கொடுத்தீர்கள் என்று என்னிடம் கேட்ட அவர் இதனால் மிகவும் கவலை அடைந்தார். அப்போது நான் சுகமாகத்தான் இருக்கின்றேன் என்று கூறினார். நான் அவரை ஹஸ்ரத் சாஹிபிடம் அழைத்துச் சென்றேன். இன்சார்ஜ் லங்கர் கானாவின் பொறுப்பாளராக இருந்த மியான் நஜ்முத்தீன் சாஹிப் அவர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மியான் ரஹ்மத்துல்லாஹ் சாஹிபிடம் அவருக்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக மிகுந்த வருத்தத்தை தெரிவித்தார்கள். பெரிய தவறு ஏற்பட்டு விட்டது. நீங்களும் செயற்கையாக நடந்து கொள்ளாமல் இருந்திருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

எந்த அளவு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நடந்த தவறுக்கு வருத்தம் தெரிவித்தார்கள் என்றால் நானும் மியான் ரஹ்மத்துல்லாஹ்வும் மிகவும் வெட்கப்பட்டோம். மியான் ரஹ்மத்துல்லாஹ் காதியானில் தங்கியிருந்த நாள் வரை ஹஸ்ரத் சாஹிப் ஒவ்வொரு நாளும் என்னிடம் அவருக்கு ஏதாவது சிரமம் ஏற்பட்டால் சொல்லுங்கள் என்று கூறிக் கொண்டே இருந்தார்கள். மேலும் மியான் நஜ்முத்தீன் சாஹிபிடமும் விருந்தினர்களை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று போதனை செய்தார்கள்.

முப்தி அஹ்மத் ஸயீத் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார். எதுவரை குறைந்த எண்ணிக்கையில் விருந்தினர்கள் இருந்து வந்தார்களோ அதுவரை விருந்தினர்களின் உணவிற்கான ஏற்பாட்டையும் தங்கும் இடத்திற்கான ஏற்பாட்டையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே செய்து வந்தார்கள். பிறகு விருந்தினர்கள் அதிகமாக வர ஆரம்பித்ததும் ஹாபிஸ் ஹாமித் அலி சாஹிப் மியான் நஜ்முத்தீன் சாஹிப் ஆகியோர் விருந்தினர்களை கவனித்து வர வேண்டும் என்று கூறி அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதற்கான பயிற்சியை வழங்கினார்கள். பிறகு பாருங்கள். விருந்தினர்களுக்கு எவ்வித தொல்லையும் ஏற்படக் கூடாது. அவர்களுக்கான உணவு, தங்குமிடம் ஆகியவற்றிற்கான ஏற்பாட்டை நல்ல முறையில் செய்ய வேண்டும். அவர்களில் சிலரை நீங்கள் அடையாளம் கண்டு கொள்கின்றீர்கள். சிலரை நீங்கள் அடையாளம் கொள்ள முடியாமல் இருக்கலாம். ஆனால், அனைவரையும் கண்ணியத்திற்குரியவர்களாக கருதி அவர்களுக்கு விருந்தோம்பல் செய்வதே பொருத்தமான நற்செயலாகும். குளிர்காலமாக இருப்பதால் அவர்களுக்க தேநீர் வழங்க வேண்டும். எவருக்கும் துன்பம் ஏற்படக் கூடாது. நீங்கள் விருந்தினர்களுக்கு சுகத்தை தருவீர்கள் என்று நான் உங்கள் மீது நல்லெண்ணம் வைக்கின்றேன். இவர்கள் அனைவருக்கும் நல்ல முறையில் தொண்டு செய்யுங்கள். எவருடைய வீட்டில்

அதிகமாக குளிரின் தாக்கம் இருக்கின்றதோ அவர்களுக்கு நெருப்பு மூட்டுவதற்கு விறகு அல்லது கரிக்கட்டைக்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்.

அஹ்மதியல்லாதவர்களுக்கு விருந்தோம்பல் தொடர்பாக ஏற்பட்ட தாக்கம் பற்றியும் கூறவுள்ளேன்.

1905 -ல் காதியான் வந்த ஒருவர் திரும்பி அமிர்தசரஸ் சென்ற பிறகு தனது காதியான் பயணம் தொடர்பாக வகீல் என்ற பத்திரிகையில் இவ்வாறு எழுதியுள்ளார்.

நான் காதியானில் மிர்ஸா சாஹிபை சந்தித்தேன். அவரின் விருந்தாளியாக அங்கு தங்கினேன். மிர்ஸா சாஹிபின் நல்லொழுக்கம் குறிப்பாக கவனம் செலுத்தியது ஆகியவற்றிற்காக நான் நன்றி கூற வேண்டும். எனது வாயில் கடுமையான வெப்பத்தின் காரணமாக புண்கள் ஏற்பட்டன. அதனால் என்னால் சரியாக உணவு உண்ண முடியவில்லை. மிர்ஸா சாஹிப் வீட்டிலிருந்து வெளியில் வந்ததும் எனக்கு பாலும் பிரட்டும் தரும்படி கூறினார்கள். இன்றைய நாட்களில் காதியானுக்கு வெளியில் தனக்கு சொந்தமான விரிவான ஒரு தோட்டத்தில் மிர்ஸா சாஹிப் தங்கியுள்ளார். சமூகத்தில் உள்ள பெரியோர்களும் அங்குதான் இருக்கின்றார்கள். காதியானில் உள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 3000 பேர் ஆகும். ஆனால், மக்கள் பொலிவுடன் இங்குமங்கும் நடப்பதை என்னால் பார்க்க முடிந்தது. மாலியர்கோட்லாவைச் சார்ந்த நவாப் சாஹிப் அவர்களின் மிகப்பெரிய வீட்டின் கட்டிடம்தான் காதியானில் காணப்படும் ஒரேயொரு பெரிய கட்டிடமாகும். வழிப்பாதை மிகவும் மோசமாக இருக்கின்றது. குறிப்பாக பட்டாலாவிலிருந்து காதியான் வரும் அந்த ரோடுதான் எல்லா வகையிலும் சிறப்பைப் பெற்றதாக இருந்தது. வரும் போது குதிரை வண்டியில் வந்ததால் மிகவும் கஷ்டம் ஏற்பட்டது. திரும்பிச் செல்லும்போது நவாப் சாஹிபின் ரதத்தில் நான் சென்றேன்.

மிர்ஸா சாஹிபை சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் எனது உள்ளத்தில் அலை மோதாமல் இருந்திருந்தால், எட்டு மைல்கள் என்ன? 8 அடிகள் கூட என்னால் எடுத்து வைத்திருக்க முடியாது. விருந்தினர்களுக்கு கண்ணியம் அளிப்பது சில நபர்கள் மட்டும் செய்யும் ஒரு பணியாக அங்கு எனக்கு தென்படவில்லை. மாறாக, காதியானிலுள்ள சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே என்னுடன் ஒரு சகோதரரைப் போன்றே பரிமாறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த விருந்தோம்பல் நமது மூளைகளில் புத்தம்புதிதாக பதிந்து விட வேண்டும். நமக்கு நெருக்கமானவர்கள் நண்பர்கள் ஆகியோருடன் மட்டுமின்றி மிகத் தொலைவில் இருந்து உங்களிடம் வரும் நீங்கள் அறியாத விருந்தினர்களிடமும் நீங்கள் விருந்தோம்பலைப் பேண வேண்டும். Climate நன்றாக இருக்கவும் துஆ செய்யுங்கள். இதன் காரணமாக ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டாலும் பணியில் இருப்பவர்கள் கடந்த வருடத்தைப் போன்றே தைரியத்துடன் செயல்பட வேண்டும்.

தொண்டு செய்ய வேண்டும் என்றால் தியாகங்கள் செய்ய வேண்டியது வரும். எளிதாக நாம் தொண்டு செய்வது என்பது முடியாது என்பதை நினைவில் பதித்து வையுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்தவாறு நீங்கள் அனைவரும் உங்கள் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றும் நற்பாக்கியத்தை அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 18.07.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**